பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 08 2024 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்தியவர் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.
- உணவுப் பதப்படுத்துதல் துறை விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவுவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.
- நீலகிரி மாவட்டத்தில் யானைகளின் வழித்தடத்தில் கட்டப்பட்டுள்ள 35 தனியார் தங்கும் விடுதிகளை 15 நாட்களுக்குள் இடித்து அகற்றுமாறு அதன் உரிமையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
- நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனத்த மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்தியவர் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு அவர் பேசினார்.

பன்முகத்தன்மை கொண்ட கட்சிகளுடன் இணக்கத்தை கடைபிடித்தார் என்றும், அவரது பொதுநல தொண்டு, நாட்டிற்கு நன்மையாக அமைந்தது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மாநிலங்களின் வளர்ச்சி அவசியம் என்று அவர் வலியுறுத்தியதாக கூறினார்.

அடித்தட்டு மக்களுக்கு தரமான கல்வி அளிக்க பல்வேறு திட்டங்களை கருணாநிதி அமல்படுத்தினார் என்று அவர் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் திமுக அங்கம் வகித்தது குறித்து குறிப்பிட்ட அவர், அப்போது வெற்றிகரமான கூட்டணி அமைய காரணமாக திகழ்ந்தார் என்றும் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழு திட்டத்தை தொடங்கி மகளிர் மேம்பாட்டிற்கு காரணமாக கருணாநிதி திகழ்ந்தார் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

முன்னதாக திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்ட கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பெற்றுக்கொண்டார்.

பின்னர் உரையாற்றிய அவர், மறைந்த முதலமைச்சர் கருணாநிதி மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் என்றும், சுதந்திர தினத்தில் மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் என்றும் குறிப்பிட்டார்.

அவரது வழியில் திமுக அரசு, தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதாகத் தெரிவித்தார்.

கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட ஒப்புதல் அளித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும், நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கிற்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

உணவுப் பதப்படுத்துதல் துறை விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவுவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இத்துறை மூலம் மாநிலங்களின் வருவாய் அதிகரிப்பதாகவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதாகவும் கூறினார்.

உலக உணவு இந்திய திருவிழா அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இதன் மூலம் உணவு பதப்படுத்துதல் துறையில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து எடுத்துக்காட்டப்படும் என்று குறிப்பிட்டார்.

இத்துறையில் ஈடுபட்டுள்ள அவர்களை ஒருங்கிணைக்க இது சிறந்த வாய்ப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அமைச்சகத்தின் திட்டங்கள் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக குறிப்பிட்டார்.

அத்துடன் இந்திய உணவுப்பொருட்களை உலக அளவில் பிரபலப்படுத்தவும் தமது அமைச்சகம் செயல்பட்டு வருவதாகவும் திரு. சிராக் பஸ்வான் கூறினார்.

<<<<>>>>

கடலோர காவல்படையின் தலைமை இயக்குநர் ராகேஷ்பால் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 59.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட அவர், ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்டோர் மருத்துவமனைக்குச் சென்று ராகேஷ் பாலின் உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

ராகேஷ் பாலின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள திரு. ராஜ்நாத் சிங், அவரது தலைமையின்கீழ் நாட்டின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் சிறந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது மத்திய அரசின் துறைகளில் நேரடி சேர்க்கை மூலம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

பல்வேறு அமைச்சகங்களில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணைச் செயலாளர்கள் பதவிகளுக்கு காலியாக உள்ள 45 பணியிடங்களை நிரப்புவதற்கு அண்மையில் மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் விளம்பரம் வெளியிட்டிருந்தது.

இந்நடவடிக்கையை காங்கிரஸ் கட்சி குறை கூறியதை அடுத்து அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வீரப்ப மொய்லி தலைமையிலான நிர்வாக சீர்திருத்தக் குழு பல்வேறு பதவிகளுக்கு சிறப்பு நிபுணத்துவம் கொண்டவர்களை நியமிக்கலாம் என்று பரிந்துரை செய்திருந்ததாக கூறினார்.

இந்த பரிந்துரையை அமல்படுத்தும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வெளிப்படைத்தன்மை முறையில் காலிப்பணியிடங்களை நிரப்பும் என்று திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்தார்.

முன்னதாக இந்நடவடிக்கை நாட்டின் இடஒதுக்கீட்டுக் கொள்கையை பாதிக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மத்திய அரசைக் குற்றம் சாட்டி இருந்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் யானைகளின் வழித்தடத்தில் கட்டப்பட்டுள்ள 35 தனியார் தங்கும் விடுதிகளை 15 நாட்களுக்குள் இடித்து அகற்றுமாறு அதன் உரிமையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இம்மாவட்டத்தில் பொக்காபுரம், சிங்காரா, வாழைத்தோட்டம், சொக்கநல்லி, செம்மநத்தம் ஆகிய பகுதிகளில் யானை வழித்தடத்தை மறித்து தனியார் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளதாக கடந்த 2008ஆம் ஆண்டு பொதுநல வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அதை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், விடுதிகளை காலி செய்யுமாறு 2011ஆம் ஆண்டு உத்தரவிட்ட நிலையில் அதனை எதிர்த்து தனியார் விடுதி உரிமையாளர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 2018ஆம் ஆண்டு யானை வழித்தடத்தில் உள்ள 38 தனியார் தங்கும் விடுதிகளை மூடி சீல் வைக்க உத்தரவிட்டதன் அடிப்படையில் விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்வழக்கில் மாவட்ட நிர்வாகமும், தமிழக வனத்துறையும் நீதிமன்றத்திற்கு பல்வேறு தவறான தகவல்களை வழங்கியிருப்பதாக விடுதி உரிமையாளர்கள் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி வெங்கட்ராமன் தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவின் விசாரணை முடிந்ததையடுத்து, குடியிருப்புக்கான உரிமத்தைப் பெற்று கட்டப்பட்டு வணிக ரீதியாக பயன்படுத்தப்பட்டு வரும் தனியார் தங்கும் விடுதிகளை இடிப்பதற்கு கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

இந்நிலையில் 15 நாட்களுக்குள் அந்த விடுதிகளை இடித்து அகற்றுமாறு நீலகிரி மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

நிரந்தர மற்றும் தற்காலிக பட்டாசு கடைகளின் விற்பனை உரிமங்களைப் பெறுவதில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுக்கு தமிழ்நாடு பட்டாசு வணிகர்கள் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் இரண்டு நாட்கள் நடைபெற்ற பட்டாசு வர்த்தக கண்காட்சி மாநில மாநாட்டு நிறைவு நிகழ்ச்சிக்குப் பிறகு, அக்கூட்டமைப்பின் தலைவர் திரு. ராஜாசந்திரசேகரன் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

தென் மண்டலத்தில் உள்ள மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சார்ந்த உயர் அலுவலர்கள் இந்தக் கூட்டததில் கலந்துகொள்கின்றனர்.

அனைத்து அலுவலகங்களின் செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து அவர்கள் இந்தக் கூட்டத்தில் எடுத்துரைக்க உள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் ஆந்திரா, தெலங்கானா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சார்ந்த உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனத்த மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன், நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

அத்துடன் திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் ஆகிய வட உள் மாவட்டங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷில் தேவையான சீர்திருத்தங்கள் மேற்கொண்ட பிறகு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் முதன்மை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குவைத் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமர் திரு. ஷேக் அகமது அப்துல்லாவை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.

<<<<>>>>

சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்திய கடற்படைக் குழு இரண்டு நாள் பயணமாக **INS Tabar** கப்பல் மூலம் டென்மார்க் நாட்டின் **Esbjerg** சென்றடைந்தது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் அமர்நாத் யாத்திரை இன்று காலையுடன் நிறைவடைந்தது.

<<<<>>>>

தமிழக தலைமைச் செயலாளர் திரு. ஷிவ்தாஸ் மீனா தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் பௌர்ணமி கிரிவலம் இன்று நடைபெற உள்ள நிலையில் கிரிவலப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றப்பட்டது.

<<<<>>>>